தோழிமார் இருவரும்
டணையர் சேர்க்கம்.

0 – 6
N30
148385

5

தோழிமார் இருவரும்

மாணவர் பேச்சும்

நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன்
உண்மை யறிவே மிகும்.

1930

கமல நிலயம்

3, பேயாழ்வார் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி, மதறாஸ்.

2 4 FEB 19

ஏ – 6.
M30
148385

அணா 2

148385

தோழிமார் இருவர்

[illegible], மாந்தோப்பில் குயில்களின் அழகிய நாதம், அக்கொடி லதா கிருகம், எதிரில் பலவர்ண புஷ்பச் செடிகளைக்கொண்ட கொல்லை, அதன் மத்தியில் நிழல் செறிந்த மரத்தடியில் சொச்சமானதொரு பளிங்குக்கல்! அடீ கமலம், இதுவே ஒரு கண் கொள்ளாக்காட்சி யல்லவா? அப்பளிங்கு கல்லின்மேல் உன்னைப்போன்ற சுந்தர யுவதி ஒருத்தி யாரையோ தியானம் செய்துகொண்டு பூமாலைத் தொடுத்து வந்தால் அவ்விசித்திரக் காட்சியை யாரால் வர்ணிக்க முடியும்?

—தங்கம், நீ பெரிய கவியாய் விட்டாயே! சொற்ப சொற்களைக்கொண்டு என்ன அழகிய சித்திரம் வரைந்து விட்டாய்! ஸ்ரீ டாகூர் சிறு கதைகளின் சொற்சித்திரங்களோடு இதை ஒப்பிடலாம்போலிருக்கிறதே! இளமையிலேயே இவ்வளவு அழகிய வர்ணனை செய்தால் உன்னை வர கவி என்று ஏன் அழைத்தல் கூடாது?

—நான் இங்குவந்து பத்து நிமிஷமானாலும், கமலம், நீ கவனியாமல் ஏதோ யோசனையில் இருந்தாயே அதற்காக உன்னை யோகி என்றழைக்கலாமா? முன்பு உனக்கு நாங்கள் சித்திராங்கனை என்று வேடிக்கையாக பேரிட்டிருந்தோம். அதை இங்கு நீ உண்மைப்படுத்தி விட்டாய். உன்னைச்சுற்றி எங்கு பார்த்தாலும் அழகு பொழியும்படிச் செய்திருக்கிறாயே! உனக்குத்தான் என்ன சுவையடீ!

—என்னை ஏன் பரிகாசம் செய்கிறாய்? உன் விசித்திர தையல் வேலையைப்போல இது அழகாயிருக்க முடியுமா?

—போடீ, பயித்தியம். உன் உயர்ந்த பூ வேலையை என் அற்பத் தொழிலோடு ஒப்பிடலாமா? அது போகட்டும்,

24 FEB 1931

நீ தொடுக்கும் இவ்வழகிய மாலை என் சகோதரன் கோபீநாதனுக்குத் தானே? அவன் பெயரைச்சொன்னாலே உன் முகம் பூரித்துப் போகிறதே!

—அப்படித்தான் இருக்கட்டுமே அதில் என்ன தப்பு! எதையும் அக்கரையோடு செய்வதுதான் என் சுபாவம். இன்று நீ என்னிடம் வெகு அன்புகூர்ந்து வந்திருக்கிறபடியால் நான் செய்வதெல்லாம் உனக்கு மித மிஞ்சின அழகோடு இருப்பதாகத் தென்படலாம். அதனால் என்னுடைய அற்ப நிலை மாறி விடாது.

—அற்பமாவது சொற்பமாவது! நீ யுக ஸந்தியைப் படித்த பிறகும் கூட இப்படிப் பேசலாமா? அர்ஜுனன் கனவில் வந்த அற்பப் பயல் எவ்வளவு பெரிய ஆளை தோற்கடித்தான்! பதவியினால் என்ன பயன்? ஊக்கமும் விடா முயற்சியும் தான் முக்கியம்.

—ஆமாம், 'முயற்சி திருவினை ஆக்கும்' என்று திருக்குறளில் நாம் படித்திருக்கிறோம் ஆனால் அதை நடத்தையில் காட்டுவது எவ்வளவு கஷ்டம்! இருந்தாலும் அது கைக்கூடும்போது சொல்லொணாத பயனைத் தருகிறது. இயற்கைபழகையும் தோற்கடிக்கும்படியான கிஷ்கந்தை நகரை அற்ப குரங்குகள் கட்டிவிடவில்லையா? இது ஆதி பாண்டியனில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறதே!

—என் சகோதரனும் அதைத்தான் சொல்லுகிறான். உன்னை மகிழச்செய்யும்பொருட்டு அவன் வெகு ஊக்கத்தோடு புள்ளாங்குழல் வாசித்து வருவது உனக்கே தெரியும். கவலைப்படாதே திருக்குறளில் "தவம் செய்வார்

தம் கருமம் செய்வார்'' என்று கூறியிருப்பதுபோல குழல் பயிலும்போதெல்லாம் அவனுக்கு உன் எண்ணமே!

—அதிருக்கட்டும், தங்கம், உன் கவிதை போதும், வீட்டில் யாவரும் க்ஷேமந்தானே?

—கோபிநாதன் உட்பட யாவரும் க்ஷேமமே. நான் உனக்கு ஒன்று சொல்லுகிறேன் கேள். டாகூர் சிறு கதைகளில் கிரிபாலா தன் கோபிநாதனை நழுவவிட்டு வெகு வேதனைபட்டு நாடக மேடை ஏறி அவனைத் திருப்ப வேண்டி வந்ததைப் போலே நீயும் செய்யாதே.

—தங்கம், நீ உவமை கூறுவதில் மகா கெட்டிக்காரிதான். ஆனால் இந்தத்தடவை நீ பிசகி விட்டாய். மேற்கூறிய இருவருக்கும் பெயர்தான் ஒன்றே யொழிய இருவருக்கும் குணங்களில் எவ்வளவு வித்தியாசம்!

—கமலம், கோபிக்காதே. அவன் உன் மாலையை உயிராகக் கொள்வதுபோல நீ அவன் குழலில் பரவசமாய் விடுகிறாய். உங்களிருவருக்கும் எங்கு பித்து பிடித்துவிடுமோ என்று அப்படிச்சொன்னேன்.

—அடீ, உண்மையில் குழல் என்றால் எனக்குப் பிராணன். யுக ஸந்தியில் பார்க்க வில்லையா? ஸ்ரீ கிருஷ்ணன் குழலூதும்போது ஜடப்பொருள்களும் அசைவற்று நிற்குமென்பதை. ஸ்ரீ கிருஷ்ணன் பின் ராதை பித்துபிடித்துச் சென்றதுகூட அக்குழலின் பொருட்டுத்தானே!

—ஆமாம், நீங்களிருவரும் ராதா கிருஷ்ணர்களைப்போல் வாழலாகாதா?

—ராதாகிருஷ்ணன் என்ற பெயர் போல கமலா—என்ற பெயர் உங்களவருக்குக் கிடைக்கவேண்டாமா?

மாணவர் பேச்சு

தலை குனிய வேண்டியதாய் விட்டது, நான் என்ன பட்டம் பெற்றால் என்ன! பரீக்ஷையில் பட்டம் கிடைத்து விட்டதென்று இறுமாந்திருந்தேன்! ஒரு நொடியில் அடக்கி விட்டாள் அவ்விளம் பெண்மணி.

—யாரடா, கிருஷ்ணா, உன் மாமன்மகள் கமலா தானே அவள்தான் நல்ல புத்திசாலி என்பது தெரியுமே!

—பரீக்ஷை தேரினதும் நம்மூர் சென்றேன்—பெரும் பாலும் அவளைக் காண்பதற் கென்றும் கூடச் சொல் லலாம். ஊற்றிலிருந்து குடிக்க நீர் கொண்டு வர மாலைப் பொழுதில் அவள் குடத்தை எடுத்துக் கொண்டு புறப் படுவாள். ஐரோப்பிய முறையில் நானும் ஒழுங்காய் உடுத் திக் கொண்டு அவ்வூற்றுப் பக்கத்திலுள்ள சோலைகளில் உலாவச்செல்வேன். எந்த தெய்வத்தின் குறும்போ தெரி யாது; நாங்களிருவரும் அநேகமாய் படித்துறையண்டை ஏக காலத்தில் வரநேரும். இருவர் முகத்திலும் புன்சிரிப் புப் பூக்கும், கண்களில் ஆனந்தம் பெருகும், இம்மட் டோடு நின்று விடும்.

—நீ பரீக்ஷைக்கு முன்பு போய் வந்த பொழுதே இதை எனக்குச் சொல்லியிருக்கிறாய். நீ இரவும் பகலும் கஷ்டப் பட்டு படித்து பரீக்ஷை தேரியது கூட அவள் மெச் சுவதற்காகத் தான் என்று கூடக் கூறினாய்.

—ஆமாம், கந்தா, அவளும் காலத்தை வீண்போக்கவில்லை. அவளும் வீட்டில் குடும்ப வேலைகளைச் செய்துகொண்டே தன்படிப்பையும் வளர்த்து வருகிறாள். இதோடு அவளுக்குள்ள மனோதைரியமும் சிறிதன்று. நீயும் பார்த்தாயே, அன்று மாலை அவ்வெளிய குழந்தை நீரில் விழுந்து அதன் தாய் அலறியபோது நாம் கூட திகைத்து நின்று விட்டோமே! கமலா தன் முன்தானையை வாரி இடுப்பில் இழுத்துக் கட்டிக்கொண்டு தடதடவென்று மார்பு அளவு நீரில் இறங்க வில்லையா! தலைவாரி பூ முடித்திருந்ததைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. குழந்தைகள், எளியவர்கள் முதலானோரிடத்தில் அவளுக்குள்ள அன்பும் ஆதரவும் வெகு மெச்சத்தக்கது.

—ஆமாம், கிருஷ்ணா, எனக்குக்கூட மயிர் சிலிர்த்துவிட்டது. பூட்ஸும் நிஜாருமாக இருந்த நாம் என்னசெய்வதென்று விழித்தோமே! என்ன வெட்கக்கேடு!

—குழந்தையை ஒரு கையில் அணைத்துக் கொண்டு கரைக்கு நீந்தி வந்தபோது அவள் ஒரு தேவ கன்னிகையோவென்று நான் பிரமித்துவிட்டேன். அவள் கரையேறித் தாயினிடம் குழைந்தையைக் கொடுத்தபோது பார்வதி தேவியே கைலாஸத்திலிருந்து நேரில் வந்து புத்திரதானம் செய்திருந்தால்கூட அவ்வளவு சோபித்திராது. கமலாவின் முகப் பூரிப்பும், அவள் உடலோடு உடலாய்ப்படிந்திருந்த மெல்லிய ஆடையுடன் நீர் சொட்டச்சொட்ட அவள் நின்றிருந்த பாவமும் எனக்குக் கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது. அவளுடைய அவயவங்களில் பிரகாசித்த இளம் செந்நிற மேனி யழகு அப்பொழுதலர்ந்த தாமரைப் பூவிலே கூடக் காண்பதரிது.

—கிருஷ்ணா, நீ வர்ணித்து வருவதைப்பார்த்தால் நீ
பெரிய கவிஞனாய் விடுவாய் போலிருக்கிறதே!

—போடா பயித்தியக்காரா, அன்று நீயும் இருந்தாயே
நான் சொல்லியதில் ஏதாவது தவறுண்டா? அன்றுதான்
உண்மையான காதல் இன்னதென்று நான் உணர்ந்தேன்.
அது தெய்வத்தன்மை வாய்ந்தது; எதற்கும் உதவாத
வனையும்கூட மகானாக்கி விடும், துரும்பையும் கரும்பாக்கும்!

—ஆமாம், அது பெருமை வாய்ந்தது மகா புனிதமானது
என்பது எனக்கும் தெரியும். அது விஷயமாக நான் பட்—
பாட்டைப் பிறகு சொல்லுகிறேன். இப்போது உன் விஷ
யத்தை மேலே சொல்லு கேட்போம்.

—நந்தா, மேற்கூறியவாறு மௌனசந்திப்போடு திருப்தி
யடைந்திருக்க என்னால் முடியவில்லை. என் மாமன் வீட்டிற்
குச் சென்று அவரிடத்தில் என் கருத்தை வெளியிட்டேன்.
அதற்கு அவர், "அப்பா, தற்கால வழக்கம் உனக்குத்
தெரிந்ததே. பெண் விருப்பமின்றி நாம் ஒன்றும் சொல்
வதற்கில்லை. நீ அவளோடு நேரில் பேசிப்பார்," என்றார்.

—உனக்குப் பழம் நழுவி பாலில் விழுந்தது போல
யிற்று அல்லவா?

—அதைச் சொல்லவும் வேண்டுமா? இந்த பாக்கியப்
எப்பொழுது கிடைக்கப் போகிறதென்று ஆவலோடு எதிர்
பார்த்திருந்த நான் உடனே கமலாவின் அறைக்குச் சென்
றேன். அவள் நாற்காலியில் சாய்ந்துகொண்டு ஏதோ
புத்தகம் படித்துக்கொண்டிருந்தாள். நான் அன்றுதான்
முதல் முதல் அவளோடு பேசச் சென்றதையும் அவள்

எவ்வித வியப்பும் கொள்ளவில்லை. சகஜமாக எழுந்திருந்து என்னை மற்றொரு நாற்காலியில் உட்காரும்படிச்சொன்னாள். நானே சிறிது திடுக்கிட்டு நாணமுற்றேன். அவள் அதைக் கண்டு புன் முறுவல் பூத்து, "நீர் பரீக்ஷையில் தேறினதைக் கேட்டு வெகு சந்தோஷம்" என்றாள்.

—உன் பீடிகைக்கு முடிவேயில்லை, கிருஷ்ணா, விஷயம் எப்படி முடிந்தது? சொல்லு.

—அது தான் அதிலிருக்கிற வேடிக்கை. நான் சென்ற விஷயத்தை அவள் அறிந்து கொண்டாளானாலும் அதை வாய்விட்டுப்பேச சந்தர்ப்பம் வாய்க்கும்படி அவள் விடவேயில்லை. புத்தகம் என்னது என்று கேட்டேன். டாகூர் சிறுகதைகள் என்றாள். கேசவலால் கதை இருக்கிறதல்லவா? என்றேன். "ஆம் நவாப் மகளின் கதை" என்று நகைத்துக்கொண்டே சொன்னாள்.

—அந்தக் கதை எனக்கும் ஞாபகமிருக்கிறது. "ஆஹா! இளமைத் ததும்பும் அத்துருக்கப் பெண் அரண்மனையிலிருந்து ஒண்டியாய்ப் புறப்பட்டு நள்ளிரவில் பிணக் குவியல்களுக்கிடையில் தான் காதலித்த கேசவலாலைத்தேடி அவன் மூர்ச்சையாய்க் கிடந்ததைக் கண்டு யமுனைக்கு ஓடி தன் பட்டுச் சேலையை நீரில் நனைத்துக் கேசவலாலின் வாயில் வார்த்து மூர்ச்சை தெளிவித்தாளே, அது என்ன ஆச்சரியம்! நவாப்பின் அந்தப்புரத்தில் வளர்ந்த நங்கை எங்கே! ரத்தக்களத்தில் பிணங்களைப் புரட்டிப் பேய் போலலைந்து தான் விரும்பியவன் மூர்ச்சையாய்க் கிடப்பதைக்கண்டவுடனே தன் குழந்தையைக் காக்க முயலும் தாய்போல

முள்ளும் கல்லும் பாராது ஓடி நீர் தந்தவள் எங்கே! இந்த விந்தைக் காதலினால் நடக்குமேயன்றி வேறெதனாலும் இல்லை. இவ்வளவு கஷ்டப்பட்டுப் பிழைப்பித்தவளைக் கன்னத்தில் அறைந்தானே அந்தக் கேசவலாலை என்னவென்று சொல்வது!"

—அக்கொடுமைக்குப் பிறகும்கூட நவாப் மகள் தன் காதலன் பொருட்டு பலவிதக் கஷ்டங்களை சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொண்டாளே! அந்த மனத்திட்பம் யாரிடத்திலுண்டு? என்றாள். வாய்க்கொழுப்புகொண்டு "என்னிடத்தில் உண்டு" என்றேன். இதுதான் சமயம் என்று "அதை உம் நடத்தையில் நீர் கட்டி விடுவீராகில் உமக்கு நான் அடிமை," என்று நான் வெளியிட விருந்த வேண்டுகோளுக்குப் பதில் உரைத்துவிட்டாள்.

—கமலா சொல்வது நியாயம்தானே. புருஷன் தன் காதலிக்காகப் பல கஷ்டங்களை ஏற்க வேண்டியது அவசியம். அப்பொழுது தான் அவனுக்கு அவளுடைய அருமை தெரியும். டாகூர் சிறுகதைகள் ஒன்றில் இது வெகு திறமையுடன் காட்டப்பட்டிருக்கிறது.

டாகூர் சிறு கதைகள் ... 0 10 0

ஆதிபாண்டியன் ... 0 8 0

யுக ஸந்தி ... 0 4 0

திருக்குறள் (அறத்துப்பால்) ... 0 2 6

148385

2

கந்தா, நம் வடதேச யாத்திரையின் வரலாற்றைத் "தென் குமரி" யிடம் ஒப்புவித்து விடவேண்டாமா? அந்த "குமரி" யார் என்பது உனக்கே தெரியும். பாரததேசம் உண்மையில் புண்ய பூமிதான். எங்கு பார்த்தாலும் தெய்வ பக்தியும் தர்ம சிந்தனையும் ததும்புகிறதில்லையா! கோஸல நாடு முழுவதிலும் இன்றைக்குங்கூட ஸ்ரீராமன் பெயர் முழங்கிறது.

—கிருஷ்ணு, நீ கமலாவிடம் போகும்போது "ஆதிபாண்டியன்" என்னும் புத்தகத்தைக் கொண்டு போய்க் கொடு. இக்ஷ்வாகு நாள் முதல் ஸ்ரீராமன் காலம் வரை பெரும் கீர்த்தியோடு விளங்கிய கோஸல தேசம் எப்படிப்படிப்படியாகத் தன் பெருமையை இழந்து கடைசியில் ஒரு கைம்பெண்ணுக்கு முடிசூட்ட வேண்டிவந்ததென்பது அதில் தெரியும். அது கிஷ்கிந்தையின் உற்பத்தி, கன்யா குமரியின் மகாத்மியம், வாலிவதையின் காரணம் இவைகளை வெகு நன்றாக விளக்குகிறது.

—ஆமாம் அதை நானும் படித்திருக்கிறேன். முற்கால க்ஷத்திரிய தர்மம், அவர்கள் போர்முறை, ராஜசபையில் விவாதம், நாமகட் செல்வி என்பவர் செய்த உருக்கமான பேச்சு, ராவணன் நிலை குலைந்து "தர்ம" வேகத்தைத் தடுக்க முடியாமல் அழிந்தது இவையாவும் மனதில் படியும்படி அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நூல் கமலா வைகயிலிருக்க வேண்டியதவசியம்.

3

கிருஷ்ணா, நம் ஊருக்குப் போய் வந்தாயே, உன் "தென் குமரி" என்ன சொல்லுகிறாள். குருக்ஷேத்திரத்தில் நாம் காட்டுவழியாகச் சென்றபோது புலிவாயில் தப்பியதையும் தேனீக்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டு படுத்திய பாட்டையும் அவளுக்குச் சொன்னாயா?

—ஆஹா, நாம் பூஜைக்குக்கொண்டு போயிருந்த தேன் பொழியும் புஷ்பங்களை இரைத்துவிட்டு அந்த ஈக்களிடமிருந்து தப்பியதையும் சொன்னேன். அதைக்கேட்டு நகைத்துக்கொண்டு அவள் குருக்ஷேத்திரப் போர்களத்தை வர்ணிக்கும் யுக ஸந்தி என்னும் புத்தகத்தை எனக்குப் படித்துக்காட்டினாள்.

—நாம் அதைத்தான் யாத்திரையில் படித்துக்கொண்டே போனோமே. நீ கூட சொன்னாயே போர்களத்தின் ரத்தப் பிரவாகம், பிணக்குவியல் இவைகளைக் கண்ணாடிபோல் காட்டிய செவ்வானம் வெகு பொருத்தமானதென்று', அது ஞாபகமிருக்கிறதா!

—ஞாபகமிருக்கிறது. இருந்தாலும் அவள் சூரியோதய வர்ணனையைப் படிக்கும்போது அந்த "நித்ய கல்யாணி" யான பிரகிருதி தேவி இவளேதானோ என்று நினைக்கும்படிச் செய்து விட்டாள். கண்ணன் குழலைப் பற்றி படித்தபோது அவள் தொனியும் அக்குழல் போலிருந்தது. ஆனந்தக்களியின் தன்மை பேச்சிலேயே இப்படி மயக்கக் கூடுமானால் அது உண்மையாய்க்கிடைக்கும்போது எப்படித் தான் இருக்குமோ, அப்பா! அவள், சிறு பொடிப்பயலுக்கும்

கிழவனுக்கும் நடந்த மல்ல யுத்தத்தைப் படிக்கும்போது என்னை வயிறு வெடிக்கும்படி சிரிக்கச் செய்தாள். வயோதிகன் இடிவிழுந்த மரம்போலச் சாய்ந்து விட்டான், அந்தக் கள்ளப்பயல் எங்கே? என்று என்னை வரிட்டுப் பார்த்தாள். என்ன விடாமுயற்சி! என்ன மாயம்! ஒரு யுகம் உதயமாகும்போது கோர ரூபத்தோடு காணப்பட்டாலும் வரவர முடிவில் என்ன அழகும் ஆனந்தமும் பொழிகிறது! என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

4

நீ சவர்க்கர் ஜீவிய சரித்திரத்தைக் கொண்டு போனாயே அதைப் படிக்கும்படி அவளிடம் கொடுத்தாயா கிருஷ்ணா?

—ஆஹா, அதைப் படித்துவிட்டுச் சவர்க்கருடைய தன் மறுப்பும் தேச பக்தியும் நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர்களுக்கு அத்தியவசியம் என்றாள். நமக்கு யந்திரத் துப்பாக்கிகளும் வேண்டாம், வெடிகுண்டு எறியும் ஆகாய விமானங்களும் வேண்டாம், சவர்க்கர் தீரத்தனமும் மனவலிமையும் தான் அவசியம். தனக்கு அவைகளை அருளவேண்டுமென்று கடவுளை தினம் பிரார்த்திப்பதாகக் கூறினாள்.

—அவர் ஏராளமான பணம் செலவழித்து இங்கிலந்து சென்று பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறி, அதில் கிடைத்த பட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தும், லண்டனில் ஒரு கண்டனக் கூட்டத்தில் பொது நியாயம் ஒன்றை எடுத்துக் காட்டி அக்கண்டனக்கூட்டம்சரியானதன்று என்று கூறிய

போது ஆங்கிலன் ! ஒருவன் மிருகத்தனமாய்த் தடியால் அடித்தாலும் மனம் குலையாது அவர் பொறுமையுடன் இருந்ததும் எவ்வளவு உத்தம குணங்கள் !

—கந்தா, அவருடைய மற்ற வீரச் செயல்களையும் கமலா கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டாள். மத்திய தரைக் கடலில் பிரெஞ்சு துறைமுகத்தில் சவர்க்கர் நீரில் குதித்துத் தப்பியோடிக்கரை சேர்ந்ததும் மறுபடி கைது செய்யப்பட்டதும் வழியில் போலீஸார் தம்மைச் சித்திரவதை செய்ய முயன்றபோது அவர்கள் தீய குணத்தைத் தம் மனவலிமை கொண்டே அடக்கியதும், இதெல்லாம் ஒரு விசித்திர கட்டுக்கதை போல வியப்புண்டாக்குகிறது என்றாள். இப்பொழுது நம் நாடுதழுவி வரும் அஹிம்ஸா மார்க்கத்தில் இவ்வளவு மனத்திட்பம் நம் இளைஞர் காட்டுவார்களாகில் உலகமே வேறு உருவம் கொண்டுவிடும் ! நம் நாடு அதைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது, என்றாள்.

5

கிருஷ்ணா, கமலா நல்ல கல்வி தேர்ச்சியுடையவள் போலிருக்கிறதே ! இவள் எங்கு படித்தாளோ ?

—கந்தா, அவளுடைய உயர்தரப் படிப்பெல்லாம் வீட்டிலேயேதான். சிறு வயதில் ஆரம்பக்கல்வி பள்ளிக் கூடங்கள் ஒன்றில் போய்ப் படிக்கக் கற்றுக்கொண்டாள். மற்ற பெரிய இலக்கியங்களை எல்லாம் தானாகப் படிப்பதும் சிந்

தனை செய்வதும் தெரியாத விஷயங்களை அறிஞர்களிடம் கேட்டுத் தெளிவதும் தான் அவள் வழி.

—நம் பூர்வகாலக்கல்வி முறையல்லவோ அது. அவளைப்போல எல்லாப் பெண்களும் கற்று வருவார்களாகில் நம் நாடு என்ன உயர்நிலை பெற்று விளங்கும், ஆண்மக்கள் கூட இம்முறையைத் தழுவுவது தான் உத்தமமாகும். உலக ரீதி யறியாமல் மந்தை மந்தையாய் கல்லூரிகளில் அடைபட்டு புத்தகப்படிப்பையே பெரிதும் மூளையில் ஏற்றிக்கொண்டு பட்டம் பெறுவதில் என்ன பயன்?

—ஆமாம், கந்தா, நானும் அப்படித்தான் நினைக்கிறேன். திருக்குறளைப் பற்றி ஒரு நாள் கமலா பேசத் தொடங்கினாள். அதில் அவள் காட்டின சுவை இம்மட்டு அம்மட்டன்று. நம் கல்லூரி பண்டிதர்கள்கூட அவ்வளவு சுவை அனுபவித்திருக்க மாட்டார்கள். பதம் பிரித்து அச்சிட்டிருக்கும் திருக்குறள் அவளிடம் கண்டேன். நாமும் அந்த பதிப்பை வாங்கவேண்டும். அதில் பொருள் வெகு சுலபமாக விளங்குகிறது. அதிலிருந்து: "நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மை யறிவே மிகும்" என்னும் குறட்பாவுக்கு எவ்வளவு அழகாகப் பொருள் உரைத்தாள் தெரியுமா? ஒருவனுக்கு உண்மையாயுள்ள அறிவை வளர்க்கும் கல்விதான் கல்வியே யன்றி எண்ணிறந்த நூல்களைக் கற்றுப்பட்டங்கள் அணிந்து கொள்வதன்று. தன் உண்மையறிவை விரிக்கக்கூடிய நூல் எதுவானாலும் அதைக்கற்று, அதற்குவேண்டிய செய்கை எதுவானாலும் அதை தீரத்தன

மாகச்செய்து வருவதுதான் கல்விப்பயன் என்று கூறி, வெறும் ஏட்டுப் படிப்பு நாட்டுக்கும் உதவாது வீட்டுக்கும் உதவாது என்பாள்.

—அவள் வீட்டுக்கே ஒரு கிருக லக்ஷ்மி போலிருப்பாள்.

—ததாஸ்து.

டாகூர் சிறு கதைகள்	...	0 10 0
ஆதிபாண்டியன்	...	0 8 0
யுக ஸந்தி	...	0 4 0
திருக்குறள் (அறத்துப் பால்)	...	0 2 6
சவர்க்கர் சரித்திரம்	...	0 12 0

கமல நிலயம்,
3, பேயாழ்வார் கோவில் தெரு
திருவல்லிக்கேணி, மதராஸ்.

சென்னை-600 00…
142385

தமிழ்-லாடின் லிபி

தற்பொழுது அச்சகத்திலுள்ள தமிழ் எழுத்துக்களுக்கு பதிலாக கீழே நாம் ஈடு காட்டியிருக்கும் தமிழ்-லாடின் லிபியை உபயோகப்படுத்துவோமானால் எழுத்துக் குறிகள் தொகையில் வெகு சொற்பமாகி விடுகின்றன. இப்பொழுதுள்ள முன்னூறு குறிகளுக்கு பதிலாக முப்பது குறிகளைக்கொண்டே நம் பாஷையை எழுத சாத்தியமாகிறது. இதனால் நம் பாஷைக்கு பல நன்மைகள் ஏற்படும்.

kamala nilayam

தமிழ்-லாடின் லிபியும், அதன் உச்சரிப்பும்.

உயிர் :

a, அ	u, உ	ae, ஐ	ஃ, ஃ
a', ஆ	u', ஊ	o, ஒ	
i, இ	e, எ	o', ஓ	
i', ஈ	e', ஏ	ao, ஔ	

மெய் :

k, க்	t, ட்	p, ப்	l, ல்	ற, ற்	s, ஸ்
ங, ங்	ண, ண்	m, ம்	v, வ்	ன, ன்	h, ஹ்
c, ச்	த, த்	y, ய்	ழ, ழ்	ய, ய்	j, ஜ்
ñ, ஞ்	n, ந	r, ர்	ள, ள்	ஷ, ஷ்	kஷ, க்ஷ

உயிர் மெய் :

ka, க	ku, கு	kae, கை	k'a, க்க
ka', கா	ku', கூ	ko, கொ	k'a', க்கா
ki, கி	ke, கெ	ko', கோ	ற'a, ற்ற
ki', கீ	ke', கே	kao, கௌ	ற'a', ற்றா

உதாரணம் :

akara muதala eழuத'el'a'm ; a'தi
pakavan muதற'e' ulaku.

அகர முதல எழுத்தெல்லாம்—ஆதி
பகவன் முதற்றே உலகு.

SOLAR PRINTING WORKS, 2[illegible], HIGH ROAD, TRIPLICANE

3A / 8-62